**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : CC.No.470/2018</u>**
**<u>வழக்கு சாட்சி PW-3</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜமணி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சண்முகம் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | வீரசிகாமணி | வயது | : | 56 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 27.05.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் வீரசிகாமணியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். 23.06.2018 ம் தேதி, மதியம் 12.00 மணிக்கு மாரியம்மன் கோவில் தெருவில் வைத்து போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், லிங்கம் என்பவரும் கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி தங்கஇசக்கி என்னுடைய உறவினரா? என்றால் நண்பர். என்னுடைய வீடு மாரியம்மன்கோவில் தெருவில் உள்ளது. மாரியம்மன்கோவில் தெருவில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு போலீசார் வந்தது தெரியும்

என்றால் சரிதான். சாட்சி லிங்கவளவனுக்கு சொந்த ஊர் அருணாச்சலபுரமாகும்.

இந்த வழக்கு சம்பந்தப்பட்ட வேறு 2 வழக்குகளிலும் நான் பார்வை மகஜர் சாட்சியாவேன் என்றால் சரிதான். அந்த வேறு 2 வழக்குகளில் பார்வை மகஜர் வேறு தேதிகளில் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்றால் சரியல்ல. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியுள்ளது எனக்கு தெரியாது என்றால் சரிதான், ஆனால் எனக்கு விபரங்களை போலீசார் சொன்னார்கள். அ.சா.1 எனக்கு நண்பர் என்பதினால் நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.01 18:16:35 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No.470/2018**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காளியப்பன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஆவுடைக்கனி | தொழில் | : | கொத்தனார் |
| கிராமம் | : | வீரசிகாமணி | வயது | : | 43 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Wednesday of 27.05.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் வீரசிகாமணியில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 தங்கஇசக்கி எனது மைத்துனர். தங்கஇசக்கி என்பவர் 21.06.2018 ம் தேதி, காலை 10.00 மணிக்கு அவருடைய வீட்டில் கட்டிட வேலைக்கு என்னை அழைத்ததின் பேரில் போயிருந்தேன். அப்போது எதிரி அருணாச்சலம், சாட்சி தங்கஇசக்கியை பார்த்து தேவடியா மவனே என்று அசிங்கமாக பேசி அரிவாளை வைத்து வெட்டி விடுவேன் என்று மிரட்டினார். வைத்தியலிங்கம் வந்து சத்தம் போடவும் எதிரி அங்கிருந்து போய்விட்டார். சுவரை பூசக்கூடாது என்பதற்காக சத்தம் போட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

சாட்சி தங்கஇசக்கியின் உடன்பிறந்த சகோதரியை நான் திருமணம் செய்துள்ளேன். என்னுடைய ஊருக்கும், சம்பவயிடத்திற்குமிடையில் 15

கிமீ தூரம் உள்ளது. மாரியம்மன்கோவில் தெருவில் 60 வீடுகள் இருக்குமா? என்றால் இருக்கும். சம்பவயிடத்தில் சாரக்கம்பு போட்டு வைத்திருந்தார்களா? என்றால் இல்லை. சாந்து அந்த இடத்தில் வைக்கவில்லை. சேர்மன் அருணாச்சலம் வீட்டுவாசல் வழியாகத் தான் சுவர் பூச செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. வேறு சந்து உள்ளது. சம்பவத்தை தெருவில் உள்ள வீட்டுக்காரர்கள் பார்த்தார்களா? என்றால் பார்த்தார்கள்.

தங்கஇசக்கியின் சுவர் சேர்மன் அருணாச்சலத்தின் சுவற்றை ஒட்டியுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. தங்க இசக்கி எனது மைத்துனர் என்பதினால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.01 18:16:41 +0530